# ரஜ்கம பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரஜ்கம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 136,104 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 3,194,499 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 16,672,146 |

### 2.2.4 தொலைபேசி/ மின்சமிக்ஞை கோபுரங்கள்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2008 திசெம்பர் 16 ஆந் திகதிய 5/02/1/384 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 7(V) ஆம் பிரிவின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடவேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேச எல்லையில் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற 04 கோபுரங்களுக்காக இணக்கச் சான்றிதழ் கட்டணமாக ரூபா 22,000 தொகையும் தண்டப் பணமாக ரூபா 225,700 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அதிகாரச் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் தலைவர், உப தலைவரை உள்ளடக்கிய 14 உறுப்பினர்களும் கணக்காய்வுத் திகதியான 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையிலும் 2012 ஆம் ஆண்டிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மிட்டியாகொடகந்த காணியை ஏலவிற்பனை செய்த போது பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட 27.5 பேர்சஸ் அளவினையுடைய 12 ஆம் இலக்க காணித் துண்டு உரித்தறுதியுடன் சபைக்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிரந்தர/ தற்காலிக/ அமைய/ நாட்கூலி/ ஒப்பந்த அல்லது ஏனைய எந்த அடிப்படையிலாவது ஆட்சேர்ப்புக்களைச் செய்ய வேண்டுமாயின் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறவேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது சபையினால் 35 அமைய மற்றும் நாட்கூலி ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 6,306,882 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் 10 சந்தர்ப்பங்களின் போது சபையின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,109,500 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையிலும் அந்த முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ஊழியர்கடன் முற்பண மீதி ரூபா 26,760 ஆக இருந்தது.

(ஊ) அக்குரல உப அலுவலகத்தில் ஆயுர்வேத மருந்தகம் நோயாளிகளுக்காக சிகிச்சையளிக்காமல் பேணப்பட்டிருந்தமை 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மருந்து இருப்பின் ஒரு பகுதி ஆயுர்வேத மருந்தகத்திற்கு அடுத்தாலுள்ள தலைவருக்காக ஒதுக்கப்பட்ட அறையினுள் குவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆயுர்வேத வைத்தியருக்கு 2012 செப்தெம்பர் 08 தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரை சம்பளமாக இலக்காலப் பகுதியில் ரூபா 457,882 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.